**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**

**CC No. 476/2015**

Deposition of the witness for Prosecution **PW** 8
Name : முனிஸ்வரன்
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (23.06.2026)

Accused present

VC Start Time : 4.15 PM

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் சென்னை பெருநகரம் ராயப்பேட்டை காவல் அலுவலகத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்சமயம் மருத்துவ விடுப்பில் இருந்து வருகிறேன். கடந்த 2014 ஆம் வருடம் செங்கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பாக அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 30/2013 வழக்கினை முதல் விசாரணை செய்து காவல் ஆய்வாளர் மன்னவன் அவர்களிடமிருந்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை நான் எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்ட போது முந்தைய காவல் ஆய்வாளர் தயார் செய்த வரைபடம் சரியாக இருந்ததால் நான் தனியாக வரைபடம் தயார் செய்யவில்லை. சாட்சிகளை விசாரணை செய்த போது முந்தைய காவல் ஆய்வாளரிடம் கூறியது போல் என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கு விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் வழக்கின் சட்ட பிரிவினை 294(பி), 406,498(A), 506(1) இதச மற்றும் Sec 4 of TNPHW Act படி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்பவம் அனைத்தும் ரவணசமுத்திரத்தில் நடைபெற்றதாக தான் துலங்கும் என்றால் சரிதான். இந்த வழக்குப்படி குற்ற நிகழ்வானது 25.12.2003 திருமணம் ஆன முதல் என்று தான் உள்ளது என்றால் சரிதான். 15/6/2013 இல் தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அனைத்து மகளிர் காவல் நிலைய அம்பாசமுத்திரத்தில் 2011 இல் புகார் கொடுத்ததாகவும் அதற்கு புகார் மனு ஏற்பு மனு ரசீது எண். 471/ 2011 கொடுத்ததாக உள்ளது என்பது சரி என்றால் சரிதான். அனைத்து மகளிர் காவல் நிலையம் அம்பாசமுத்திரத்தில் எழுதி வாங்கியதை கொடுத்து நகைகளை திரும்ப கொடுக்கவில்லை என்று புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் என்ன எழுதியிருந்தார்கள் என்று அந்த வாக்குமூலத்தை பற்றி இந்த குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த அக்ரீமண்டோ அல்லது விவாகரத்து ஆவணத்தையோ இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கு கொடுக்கப்பட்ட நகைகள் பற்றி மஹரை பற்றி பள்ளிவாசலில் எழுதப்பட்டதை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

சம்பவம் ரவணசமுத்திரத்தில் நடந்ததால் அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டு உள்ளது என்று நான் நீதித்துறை நடுவர் அம்பாசமுத்திரத்திற்கு இந்த குற்ற இறுதி அறிக்கையை அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் இந்த சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், பொய்யான சம்பவங்களை கொண்டு சார்பு ஆய்வாளர் ரத்தினபால் சாந்தியிடம் கொடுத்த புகார் மனுவை சரிவர விசாரிக்காமல் ஒரு பிழையான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அதனை ஒருதலைப் பட்சமாக ஆய்வாளர் மன்னவன் விசாரணை செய்து அவர் கொடுத்த அறிக்கையின் படி ஒரு பிழையான இறுதி அறிக்கையை நான் ஒருதலைப் பட்சமாக தயார் செய்து தாக்கல் செய்து உள்ளேன் அது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

VC End Time : 04.30 PM

Taken down by me / before me through teams VC interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.23 19:40:49 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 476/2015**

Deposition of the witness for Prosecution **PW** 7
Name : மன்னவன்
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (23.06.2026)

A1 present , A2 died, A3 absent, petition filed and allowed.

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை பொருளாதார குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2013 ம் தேதி குற்றாலம் காவல் ஆய்வாளராக பணி புரிந்த போது, கூடுதல் பொறுப்பாக செங்கோட்டை காவல் நிலையம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் தென்காசி பொறுப்பு வகித்தேன். தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.30/2013 வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு 15.00 மணிக்கு சென்று சாட்சிகள் முத்து, வண்டி முத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும். அதன் பின்பு மேற்படி சாட்சிகளை விசாரித்தும் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் சுமையாள் பேகம், முகைதீன் பாத்திமா, காதர் மைதீன், முகமது இப்ராகிம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திருமதி.ரத்தினபால் சாந்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிய சார்பு ஆய்வாளர் திருமதி.சண்முக வடிவு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்கு கோப்பினை நிலைய பொறுப்பில் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் தகவல் அறிக்கை 15/6/2013 ஆம் தேதியில் சுமையால் பேகம் என்பவர் கொடுத்த புகார் மனுவில் அடிப்படையில் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் நிகழ்வு நடந்த எல்லா இடமும் ரவண சமுத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் இது சம்பந்தமாக அம்பாசமுத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பலமுறை சென்று முறையிட்டதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அனைத்து மகளிர் காவல் நிலையம் அம்பாசமுத்திரத்தில் புகார் மனு எண். 471/ 2015 கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். எனது விசாரணையில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அம்பாசமுத்திரத்தில் வைத்து இருதரப்பினரும் விசாரித்து எழுதி வாங்கியதாக எதுவும் என்னிடம் சொன்னார்களா என்றால் சொல்லி உள்ளார்கள். நான் விசாரித்து அந்த ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் போடவில்லை என்றால் சரிதான். அவர்கள் எவ்வளவு நகை கொடுத்தார்கள், ரொக்கம் கொடுத்தார்கள் என்ற விவரங்கள் எல்லாம் பள்ளிவாசல் ஆவணங்களில் எழுதப்பட்டிருந்தது அது சம்பந்தமாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் காவல் நிலைய ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது ஏதாவது உத்தரவு கொடுத்து அதன் பேரில் எதிரியை கைது உதவி ஆய்வாளர் செய்தாரா என்றால் இல்லை கைது செய்த பின்பு தான் என்னிடம் தகவல் சொன்னார்.

எனது விசாரணையிலும், முதல் தகவல் அறிக்கையிலும், புகார் மனுவிலும் எந்த தேதியில் கொடுமைகள் செய்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். திருமணம் ஆனதிலிருந்து கொடுமைகள் செய்ததாக கூறியுள்ளார். அதாவது குற்ற நிகழ்வு 25/12/2003 இல் திருமணம் நடைபெற்ற நாள் முதல் நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் துலங்கும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் இந்த சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கு சம்பவம் அனைத்தும் ரவண சமுத்திரத்தில் வைத்து நடந்ததாக புகார் மனுவில் சொல்லியிருந்தாலும் அதனைப் பொறுத்து அனைத்து மகளிர் காவல் நிலையம் அம்பாசமுத்திரத்தில் தான் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. அவர்கள் முறையாக வழக்கு பதிவு செய்திருந்தால் நாங்கள் அங்கு அனுப்பி இருக்க

வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் தவறாக போடப்பட்ட முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து ஒருதலைப்பட்சமாக சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்வதாக சொல்வது எல்லாம் பொய்யாகும் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது விசாரணை நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.23 19:41:02 +0530

Judicial Magistrate, Shenkottai